# தமிழக தொன்மைச் சின்னங்கள்

## மறுசீரமைப்பு அறிக்கை 2007 - 2010


பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

உதவி ஆசிரியர்

**த. தங்கவேல்,** பி.இ.,

உதவி பொறியாளர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2010

தமிழக அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை
எண். ..........
சென்னை - 600 008

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2010 |
| வெளியீடு எண் | : | 224 |
| நூல் தலைப்பு | : | தமிழக தொன்மைச் சின்னங்கள் மறுசீரமைப்பு அறிக்கை 2007 - 2010 |
| பதிப்புரிமை | : | தொல்லியல்துறை, தமிழ்நாடு அரசு |
| ஆசிரியர்கள் | : | முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இஆப., முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் |
| மொழி | : | தமிழ் |
| எழுத்து | : | 12 pt |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 71 |
| | | விற்பனைக்கல்ல |
| அச்சிட்டோர் | : | தொல்லியல் துறை அச்சகம், தமிழ் வளர்ச்சி வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை - 8. |

# பதிப்புரை

தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைக்கு கோயில்கள், கோட்டைகள், அரண்மனைகள், குளங்கள், சத்திரங்கள் ஆகியவை எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவை கட்டி முடிக்கப்பட்டு பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இப்பாரம்பரிய கலை உணர்வுடைய, நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு நிலைத்து நிற்கும் கோயில்கள், கோட்டைகள், அரண்மனைகள், குளங்கள், சத்திரங்கள், ஓவியங்கள், கல்படுக்கைகள் அல்லது இவற்றில் ஒரு பகுதி அழிவுற்று எஞ்சி நிற்கும் யாவும் வரலாற்றுச் சின்னங்களாக பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு நமக்கு பின்னர் வரும் சந்ததியினர் நம் முன்னோர்களின் வரலாறு, அவர் தம் கலைச் சிறப்பு (ம) ஆட்சியின் மேன்மை ஆகியவற்றை உணர்ந்து கொள்ளும் முகமாக தமிழக அரசால் தொல்லியல்துறை என்ற ஒரு துறை ஏற்படுத்தப்பட்டு இதற்கான தனிச் சட்டமாக தொல்லியல் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம் 1966 (சட்டம் 25/1966) மற்றும் தொல்லியல் சின்னங்கள் பாதுகாப்பு விதி 1971 இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் கீழ் 85 நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரசால் ஆண்டுதோறும் பாதுகாப்புப் பணிக்காக ஒதுக்கப்படும் நிதி நீங்கலாக நடுவன் அரசின் மூலம் பெறப்பட்ட பன்னிரெண்டாவது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் ரூ. 480.00 இலட்சம் 38 சின்னங்களில் பாதுகாப்பு பணிகளுக்காக கீழ்கண்ட அரசாணைகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1. அரசு ஆணை (எம்.எஸ்) எண். 108/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2) துறை/நாள். 6-6-2004
2. அரசு ஆணை (நிலை) எண். 159/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2) துறை/நாள். 8-10-2007
3. அரசு ஆணை (நிலை) எண். 175/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2) துறை/நாள். 5-10-2009

அனைத்துப் பாதுகாப்புப் பணிகளையும் பொதுப்பணித்துறை மூலமாக மேற்கொள்ளும் போது தொல்லியல் கோட்பாடுகளை, பணிகளில் கடைபிடிக்கவும் அதன் பழமைத் தன்மை மாறாமல் பணி மேற்கொள்ள ஏதுவாகவும் சில நிபந்தனைகள் பொதுப்பணித் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

* ஒப்பந்தக்காரர்கள் பாதுகாப்புச் சின்னங்களில் பணி மேற்கொண்டமைக்கான முன் அனுபவம் பெற்று இருத்தல் வேண்டும்.
* தொல்லியல் கோட்பாடுகளின்படி பணி மேற்கொள்ள ஏதுவாக ஸ்தபதி/சுதைக் கொத்தனார் மற்றும் தேவைப்படும் சிறப்புப் பொருட்கள் ஆகியவற்றைப் பணிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* சின்னங்களில் எழில்மிகு/பழமைத் தோற்றம் எந்த வகையிலும் பாதிப்பு அடையக் கூடாது.
* மேற்கொள்ளப்படும் காரைப்பூச்சு சிமெண்ட் சுண்ணாம்பு கலந்த கூட்டுக் கலவை காரையினை 1:1:5 என்ற விகிதத்தில் கலந்து உபயோகப்படுத்த வேண்டும்.
* ஏற்கனவே சின்னங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள செங்கல்லின் அளவு மாறாத வகையில் இருத்தல் வேண்டும்.
* கட்டுமானத்திற்குச் சிமெண்ட்-சுண்ணாம்பு கலந்த கூட்டுக் கலவை காரையினை மட்டுமே உபயோகப்படுத்துதல் வேண்டும். எந்தக் காரணம் கொண்டு சுத்த சிமெண்ட் உபயோகித்தல் கூடாது.
* பணி நடைபெறுகையில், பணியினை ஆய்வு செய்யும் தொல்லியல் துறை அலுவலர்களால் அறிவிக்கப்படும் முறைகளைத் தவறாது கடைபிடித்தல் வேண்டும்.
* பழைய காரைப்பூச்சு கட்டடப் பகுதிகளை அகற்றும் பொழுது எந்த அதிர்வும் இல்லாத நிலையில் கவனமாக மின்கருவிகளைக் கொண்டு அகற்றப்படுதல் வேண்டும்
* கூடுமான வரையில் பணியின் பொழுது விழுந்த பழைய கட்டுமானப் பொருட்களையே உபயோகப்படுத்துதல் அவசியம்

தொல்லியல் வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பு பணி பற்றிய இப்புத்தகம் வெளியிடுவதற்கு இத்துறையின் பொறியாளர்களால் அளிக்கப்பட்ட குறிப்புகளின் அடிப்படையிலும் கல்வெட்டுப் பிரிவு அலுவலர்கள் அளித்த ஆதாரங்களின் அடிப்படையிலும் இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்ட 38 சின்னங்களில் 10 சின்னங்களுக்கு மட்டும் பாதுகாப்பு அறிக்கை ஆங்கிலத்திலும் மீதமுள்ள சின்னங்களுக்கான மறுசீரமைப்பு அறிக்கை தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தொல்லியல் துறை மூலமாக 12-வது நிதிக்குழு மானியத்தின் கீழ் பெறப்பட்ட நிதியில் பொதுப்பணித் துறை மூலம் அத்துறையின் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு. எஸ். கருணாகரன் பி.இ., மற்றும் அவர் ஆளுகைக்குட்பட்ட செயற்பொறியாளர்கள் மற்றும் அவர்களது சார்நிலைப் பணியாளர்கள் மூலம் காலம் தவறாது முடிக்கப்பட்ட அனைத்துப் பணிகளைப் பற்றி நான் எனது பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை தயாரித்து வெளிக்கொணர உதவிய தொல்லியல்துறை பொறியாளர்களான திரு. ரா. நாராயணன், உதவிச் செயற் பொறியாளர்., திரு. த. தங்கவேல், உதவிப் பொறியாளர்., திரு. கா. ஒலிமாலிக், இளநிலைப்பொறியாளர்., திரு. கா. மகிழமுத்து, இளநிலைப் பொறியாளர்., திரு. பாலமுருகன், இளநிலைப்பொறியாளர்., சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட இராசயனப் பாதுகாப்பு பணிக்கு உதவிய திரு. மு. சு. அசோக்தீன், இரசாயனர் மற்றும் திரு. பா. இரவிசங்கர், உதவி இரசாயனர்., திரு. த. ஆனந்தன், உதவி இரசாயனர்., திரு. வா. பன்னீர்செல்வம், ஆய்வக உதவியர்., திரு. இலா. எபிரியன்ஸ் கண்காணிப்பாளர், திருமதி. கோ. கீதா அச்சுக்கோர்ப்பாளர் ஆகியோரையும் நினைவு கூற விரும்புகிறேன். மேலும் இந்நூல் வெளிவர உரிய நிழற் படங்கள் எடுத்து உதவிய நிழற்படக்காரர் திரு. ந. க. சண்முகநாதன், முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளர் திருமதி. பா. வளர்மதி ஆகியோரும் நினைவுகூறத் தக்கவர்கள் ஆவர்.

இந்நூல் ஒரு கையேடாகும் இதில் சொல்லப்பட்ட தொழில்நுட்ப நுணுக்கங்கள் மற்றும் புராதன சின்னங்களின் பாதுகாப்பு பற்றிய செய்திகள் அனைவருக்கும் குறிப்பாக தொல்லியல் பொறியாளர்கள், தொல்லியல் அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என நம்புகிறேன்.

நாள் : 23-3-2010

சென்னை-8

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# பொருளடக்கம்

பதிப்புரை

1. பூலாவுடையார் கல்வெட்டுகள், சீவலப்பேரி 1
2. விஷ்ணு கோயில், உலகாபுரம் 3
3. கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள் வேலாயுதம்பாளையம் 5
4. சொக்கீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம் 7
5. திரைலோக்கியநாதர் ஜீனசுவாமி கோயில், திருப்பருத்திக்குன்றம், காஞ்சிபுரம் 9
6. சிவன் கோயில், கூரம் 11
7. பாச்சில் அமலீஸ்வரர் கோயில், அழகியமணவாளம் 13
8. சடையார் கோயில், திருச்சினாம்பூண்டி 15
9. 44 ஆங்கிலேயே வீரர்களின் கல்லறை - பாஞ்சாலங்குறிச்சி 17
10. கட்டபொம்மன் கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி 19
11. 5 ஆங்கிலேயர் கல்லறை, ஒட்டப்பிடாரம் 21
12. கட்டபொம்மன் கோட்டை, கமுதி 23
13. இரட்டைக் கோயில், கீழையூர் 26
14. திருநீலகண்டம், பனஞ்சாடி 30
15. வழிப்போக்கர் மண்டபம், தாங்கி 33
16. சப்தமாதர் சிற்பங்கள், பெருங்காஞ்சி 36
17. அகஸ்தீஸ்வரர் கோயில், பெருங்குடி 38
18. ஸ்வஸ்திகா கிணறு, திருவெள்ளரை 40
19. அஸ்தகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர் 42
20. உதயகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர் 44
21. முருகன் கோயில் மற்றும் சமணப்படுக்கைகள் வரிச்சியூர் 46
22. பிராமிக் கல்வெட்டுகள், கருங்காலக்குடி 48
23. குகைக்கோயில் சிற்பங்கள், ஐவர்மலை, தாதநாயக்கன்பட்டி 50
24. ஸ்ரீகைலாயமுடையார் கோயில், சோழமாதேவி 53
25. வாலீஸ்வரர் கோயில், தக்கோலம் 55
26. சிவன் கோயில், கோபுரப்பட்டி 59
27. மாளிகைமேடு, உடையார்பாளையம் 62

# 1. பூலாவுடையார் கல்வெட்டுகள், சீவலப்பேரி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 2.65 இலட்சம்



திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் சீவலப்பேரி என்ற ஊரில் பூலாவுடையார் கல்வெட்டுகள் அமைந்துள்ளது. இங்குள்ள சிறு குன்று "மறு கால் தலை மலை" என்றும் "கூவில் உடையார் மலை" என்றும் அழைக்கப்படுகிறது. இம்மலையின் தென்பகுதியில் குகை ஒன்று உள்ளது. இதில் சமண முனிவர்களுக்கென்று அமைக்கப் பெற்ற கற்படுக்கைகள் கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன.

அரசாணை எண்.96/தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை/நாள்: 29.5.1990-இல் பூலாவுடையார் கல்வெட்டு பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேற்படி சின்னத்தின் பாதுகாப்புப் பணிகளை பொதுப்பணித்துறை மூலம் 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண்.159/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2) துறை/நாள்: 8.10.2007-இல் தமிழ்நாடு அரசால் ரூ. 2.65 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கீழ்க்காணும் பணிகள் செய்து முடிக்கப்பட்டது

1. சின்னத்தினைச் சுற்றி கற்கட்டுமானச் சுவரின் மீது இரும்பு ஆங்கில் ஊன்றி கம்பி வலை அமைக்கப்பட்டது.
2. சின்னத்தின் அணுகுபாதையில் சிமெண்ட் கான்கிரீட் பாதை அமைக்கப்பட்டது.
3. படுக்கை மற்றும் கல்வெட்டுப் பகுதி இராசாயன பிரிவின் கண்காணிப்பின் கீழ் சுத்தம் செய்யப்பட்டது.
4. சின்னத்தின் வரலாற்றுக் குறிப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கிரானைட்கல்லில் செதுக்கி வைக்கப்பட்டது.

இப்பணிகளின் மூலம் இச்சின்னம் சீரடைந்து வரலாற்று மாணவர்கள் மற்றும் தொல்லியல் விழிப்பாளர்களுக்கு பயனாக உள்ளது.

# உ. விஷ்ணு கோயில் - உலகாபுரம்

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 5.00 இலட்சம்



விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் உலகாபுரம் என்ற கிராமத்தில் இவ்விஷ்ணு கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற தானங்கள் பற்றிய செய்திகள் உள்ளன. இக்கோயில் சோழர் காலத்திய கட்டடக் கலைப்பாணியில் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவை சோழர் காலத்தவை.

மேற்காணும் கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.79/ தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள்: 23.3.1987 தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ் மேற்படி கோயிலின் பாதுகாப்புப் பணிகளை பொதுப்பணித் துறை வாயிலாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசால் அரசாணை எண்.159/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2) துறை/நாள்: 8.10.2007 மூலமாக ரூ. 5.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1. செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்யும் பணி.
2. கோயில் முன்புறம் அபாயகரமாக தொங்கி கொண்டு இருந்த கருங்கல் தூண், மற்றும் உத்திரக்கல் ஆகியவற்றை அகற்றும் பணி.
3. பலி பீடத்தை பிரித்து சரியாக பொருத்தும் பணி.
4. பிரதான கோயில் மற்றும் அம்மன் சன்னதி ஆகியவற்றின் கடக்கால் பகுதிகள் திடப்படுத்தும் வகையில் கருங்கல் மற்றும் கூட்டுக் கலவை கொண்டு மேற்கொள்ளும் பணி.
5. அம்மன் சன்னதி முழுவதும் உடைத்து எடுத்துவிட்டு செங்கல் மற்றும் கூட்டுக் கலவை கொண்டு கட்டி முடிக்கும் பணி.
6. அம்மன் சன்னதி மேற்கூரை தேக்கு மரச்சட்டங்கள் மற்றும் மரங்கள் கொண்டு அமைத்து அதன் மேல் ஓடுகள் போடும் பணி.
7. பிரதான கோயிலின் மேற்பரப்பில் தளம் ஓடு பாவும் பணி.

# 3. கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள் வேலாயுதம்பாளையம்

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 5.00 இலட்சம்



கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் எனும் கிராமத்தில் தமிழ்க் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள் அமைந்து உள்ளன. இவ்வூர் வேலாயுதம்பாளையம் என்றும் புகளூர் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வூருக்கு அருகில் ஆர்நாட்டார்மலை என்ற குன்றில் இயற்கையாக அமைந்துள்ள குகைத் தளங்களில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் உள்ளன. தமிழக வரலாற்றுக்கு இன்றியமையாத மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் இங்கு உள்ளன.

இத்தமிழ் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்: 1109, கல்வித் துறை நாள்: 17-6-1978 மூலமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பாதுகாக்கப்பட்ட சின்னத்தில் பாதுகாப்பு பணிகளை 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசாணை (நிலை) எண்: 159/சுற்றுலா(ம)பண்பாட்டுத்(அதொ2) துறை/நாள்: 8-10-2007-இல் ரூ. 5.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. செடி, கொடிகளை அகற்றும் பணி
2. இரும்பு ஆங்கில் கம்பங்களில் அடிப்பக்கத்தில் 12 மி.மீ. இரும்பு பிளேட் பொருத்தப்பட்டு, இரும்பு ஆங்கில் கம்பங்கள் பொருத்தி கம்பி வலை வேலி அமைக்கும் பணி
3. இரும்பு கிரில் வேலி அமைக்கும் பணி
4. சிமெண்ட் கான்கிரீட் 1:2:4 கொண்டு இரும்புக்குழாய் கைப்பிடி அமைக்கும் பணி
5. முள்கம்பி வேலி அமைக்கும் பணி
6. வழிகாட்டி பலகை அமைக்கும் பணி
7. பாறைகளை உடைத்து, செல்லும் வழியை அகலப் படுத்தும் பணி
8. பாலீஸ் செய்யப்பட்ட கிரானைட் கல்லில் அறிவிப்பு பலகை அமைக்கும் பணி
9. இரும்பு ஆங்கில் கம்பங்களுக்கு வர்ணம் அடிக்கும் பணி
10. கல்படுக்கைகளில் உள்ள கறைகளையும், எனாமல் வர்ணம் கறைகளையும், அழுக்கு, தூசி ஆகியவற்றை இரசாயனம் மூலம் சுத்தம் செய்யும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டது.

# 4. சொக்கீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 2.00 இலட்சம்



காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்தில் சொக்கீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சோழ அரசனான உத்தமச் சோழனால் கட்டப்பட்டதாகும். இக்கோயில் அதிட்டானத்திலிருந்து உச்சி வரையில் கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரே தளம் உள்ள கற்கோயிலாகும். இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு எளிமையாக எடுப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசு அரசாணை எண்.23, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 12.2.1993-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேற்காணும் கோயில் 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற் கொள்ளுவதற்கு அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல் ரு. 2.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. கோயிலை சுற்றி சிமெண்டினால் ஆன தரைத்தளத்தினை அகற்றி எடுத்துவிட்டு கருங்கல் தளம் அமைத்தல் பணி.
2. கோயிலின் முன்புறம், கோயிலை மறைத்து இருந்த சுவரை அகற்றி எடுத்துவிட்டு, புதிதாக கடைக்கால் எடுத்து, கான்கிரீட் ஜல்லி போட்டு, கருங்கல் சுவர் அமைத்து அதன் மேல் இரும்பு ஆங்கில் கம்பங்கள் அமைத்து, கம்பி வேலி அமைக்கும் பணி
3. கருங்கல்லால் மடப்பள்ளி அமைக்கும் பணி
4. செங்கல் கட்டுமானம் மேற்கொண்டு மோட்டார் அறை அமைத்து, அதனை சிமெண்ட் கலவை கொண்டு பூசும் பணி.
5. கோயிலின் மேல் உள்ள வெதரிங் கோர்ஸ் உடைத்து எடுத்துவிட்டு. புதிதாக வெதரிங் கோர்ஸ் போட்டு அதன் மேல் தளம் ஓடு அமைத்தல் பணி.
6. சுற்றுப் பாதையில் உள்ள இரும்பு குழாயின் மேல் பிளாஸ்டிக் கம்பி வேலி அமைத்தல்
7. ஒரு எச்.பி. மோட்டார் பொருத்தும் பணி. அதற்கு இரும்பு கதவு பொருத்தும் பணி.
8. பழைய இரும்பு கதவுகள், ஆங்கில் கம்பங்கள், இரும்பு குழாய்கள் ஆகியவற்றிற்கு இரண்டு தடவை எனாமல் வர்ணம் அடிக்கும் பணி.
9. சுற்றுப் பிரகாரச் சுவருக்கு இரண்டு தடவை கலர் வண்ணம் அடிக்கும் பணி.

# 5. திரைலோக்கியநாதர் ஜீனசுவாமி கோயில், திருப்பருத்திக்குன்றம், காஞ்சிபுரம்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 9.00 இலட்சம்



திரைலோக்கியநாதர் ஜீனசுவாமி கோயில் திருப்பருத்திக்குன்றம் கிராமத்தில் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் உள்ள காஞ்சிபுரத்தின் தென்மேற்கு பகுதியில் சிறப்புற்று விளங்குகிறது. இக்கோயில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்தே சமண சமய முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்ந்திருக்கிறது. பல்லவர்களது ஆட்சியின் போது, தோற்றுவிக்கப்பட்ட மகாவீரர் கோயில் படிப்படியாக விரிவாக்கம் பெற்று வளர்ந்திருப்பதைக் காணலாம். இக்கோயில் சோழர் காலத்திலும், விஜயநகர மன்னர்களது ஆட்சியின் போதும், அதற்குப் பின்னரும் பல்வேறு தானங்களைப் பெற்றிருக்கிறது.

திரைலோக்கியநாதர் ஜீனசுவாமி கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண்.20, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை, நாள் 30.1.1990-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேற்காணும் கோயில் 12-வது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல் ரு.9.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. உள்வரி மற்றும் வெளிவரிக் கற்கள் பிரித்து எடுப்பதற்கு முன்பு உள்பகுதிகள் முழுவதும் சவுக்கு மரம் மற்றும் சாக்கு, இரும்பு பிளேட்டுகள் கொண்டு முட்டுக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.
2. வடக்குப் பக்கம் 17.0 மீட்டர் நீளத்திற்கும் மற்றும் தெற்குப் பக்கம் 8.0 மீட்டர் நீளத்திற்கும் பிரகாரச் சுவர் வரிக்கற்கள் எண் இடப்பட்டு, பிரித்து எடுத்து விட்டு கடக்கால் பகுதி திடப்படுத்தி மீண்டும் வரிக்கற்கள் கூட்டுக் கலவை கொண்டு அடுக்கி வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.
3. தெற்குப் பக்கம் ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் உத்திரம் அமைக்கப்பட்டிருந்ததை அகற்றி எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது
4. வெதரிங் கோர்ஸ் அகற்றி எடுத்துவிட்டு மீண்டும் புதிதாக அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது
5. பாவுக்கல் அகற்றி எடுத்துவிட்டு மீண்டும் அதே பாவுக்கல்லை பொருத்தும் பணியும், இடைப்பட்ட பகுதிகளில் கருங்கல் சிறிய ஜல்லிகள் கொண்டும் கூட்டுக் காவை 1:1:5 என்ற விகிதத்தில் கலந்து அடைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது
6. செங்கல் ஜல்லி கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு வரிக்கற்களின் இடைப்பட்ட பகுதிகள் அடைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது
7. கூட்டுக்கலவை கொண்டு தள ஓடுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது
8. செங்கற்கள் கொண்டு கைப்பிடி சுவர் கட்டும் பணியும், கூட்டுக் கலவை கொண்டு பூசும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

# 6. சிவன் கோயில் - கூரம்

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 1.00 இலட்சம்



காஞ்சிபுரம் மாவட்டம், மற்றும் வட்டத்தில் கூரம் என்னும் ஊரில் இச்சிவன் கோயில் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் உள்ள காஞ்சிபுரம் அருகில் இஞ்சம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கோயில் பல்லவர்காலக் கட்டடக் கலைப் பாணிக்கு சான்றாகத் திகழ்கிறது. இச்சிவன் கோயிலில் உள்ள ஒன்பது கல்வெட்டுகளில் இரண்டாம் நந்திவர்மன், நிருபத்துங்கவர்மன் முதலாம் இராஜராஜசோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

கூரம் சிவன் கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண். 23/தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை/நாள். 12.2.1993-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.159 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2.)துறை நாள்: 8.10.2007-இல் ரூ.1.00 இலட்சத்தில் மேற்படி கோயில் பாதுகாப்புப் பணிகளை 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளுவதற்கு தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.**

1. கோயிலின் உள்புறம் மற்றும் வெளிப்பக்கம் உள்ள பழைய சுண்ணாம்பு பூச்சினை அகற்றி எடுத்துவிட்டு புதிதாக கூட்டுக்கலவை 1:1:5 கொண்டு மீண்டும் பூசும் பணி.

2. பழைய வெதரிங் கோர்ஸ் அகற்றி எடுத்துவிட்டு செங்கல், ஜல்லி கூட்டுக்கலவை கொண்டும் புதிதாக வெதரிங் கோர்ஸ் அமைக்கும் பணியும், அதற்கு மேல் தளஓடுகள் அமைக்கும் பணி.

3. கோயிலின் பிரதான கதவு பழுதுபார்க்கும் பணியும் மடப்பள்ளியில் கதவு மற்றும் வென்டிலேட்டர் அமைக்கும் பணி.

4. கோயிலின் வடக்குப் பக்கம் சுமார் 2 அடி அகலத்திற்கு கருங்கல் தளம் அமைக்கும் பணி.

5. கோயிலின் முகப்புப் பகுதி மறைக்கும் விதத்தில் அமைக்கப்பட்டு இருந்த அறிவிப்புப் பலகை அகற்றி மீண்டும் ஓரமாக நிறுவும் பணி.

6. கதவுகள் மற்றும் இரும்பு ஆங்கில் கம்பங்களுக்கு வர்ணம் அடிக்கும் பணி.

# 7. பாச்சில் அமலீஸ்வரர் கோயில், அழகியமணவாளம்

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 7.95 இலட்சம்



திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் அழகியமணவாளம் கிராமத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. உத்தமசோழன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய மன்னர்களின் பெயர்கள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கோயிலின் வாயில் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. இக்கோயில். கருவறையை அடுத்து அர்த்த மண்டபமும் அதனை அடுத்து மகா மண்டபமும் உள்ளது. இக்கோயில் முந்தைய சோழர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண் 23/தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள்: 12.2.1993-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ் இக்கோயில் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண்:159/சுற்றுலா (ம) பண்பாட்டுத் (அதொ2) துறை, நாள்: 8.10.2007-இல் தமிழ்நாடு அரசால் ரூ.7.95 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது**

1. மண்டபத்தின் மேல் பகுதியில் வெதரிங் கோர்ஸ் அமைக்கும் பணியும், கூட்டுக் கலவை கொண்டு தள ஓடுகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.
2. செங்கற்கள் மற்றும் கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு கபோதகம் மற்றும் விமானம் கட்டும் பணி மேற் கொள்ளப்பட்டது.
3. விமானம் பகுதிகள் கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு வர்க்கப்பூச்சு பூசும் பணி மேற்கொள்ளப்பட்டது.
4. கோயிலின் முன்புறக் கதவு பொருத்தும் பணி மேற் கொள்ளப்பட்டது.
5. விமானத்தின் மேல் பகுதியில் ஒரே கலரில் கலர் வெள்ளை அடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

# 8. சடையார் கோயில், திருச்சினாம்பூண்டி

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 13.05 இலட்சம்

சென்னையிலிருந்து 342கி.மீ. தொலைவிலும், தஞ்சையிலிருந்து சுமார் 32 கி.மீ. தொலைவில் திருச்சினாம்பூண்டி உள்ளது. சிவன் கோயிலுக்கு திருச்சடைமுடியுடைய மகாதேவர் என்றும் இக்கோயிலுள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கோயில் நுழைவாயில் முன்புறமுள்ள தூண்களில் பல்லவ மன்னர்களான மூன்றாம் நந்திவர்மன் மற்றும் நிருபதுங்கனின் கல்வெட்டுக்கள் வெட்டப்பட்டுள்ளன. இக்கோயிலில் மாசிமகம் விழா எடுக்கப்படுவதைப் பற்றியும் பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கோயில் கருவறையும் அர்த்த மண்டபமும் உடைய எளிமையான கோயிலாகும். விமானம் ஏகதள விமானம் ஆகும். அழகிய நாட்டிய அணங்குகள், மத்தள கலைஞர்கள் போன்ற பல்வேறு நடன மற்றும் இசைக் கலைஞர்கள் உருவங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோயில் அதிஷ்டானத்தில் இராமாயணம் கூறும் சிறுசிறு புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. முதலாம் பராந்தகனின் காலத்தில் இக்கோயில் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இக்கோயில் பிடாரி கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண். 274, தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை, நாள் 27-8-1987-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இச்சின்னத்தில் 12-வது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசாணை எண். 159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2) துறை, நாள் 8-10-2007-இல் ரூ. 13.05 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப் பெற்றன.

1. கோயிலைச் சுற்றி எல்லை வரம்பில் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக கடக்கால் தோண்டும் பணி
2. ஆற்றங்கரையிலிருந்து கோயிலுக்கு செல்லுவதற்காக சாலை அமைக்க மணல் கருங்கல் ஜல்லி கலவை கொண்டு நிரப்பும் பணி
3. கடக்கால் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் 1:4:8 போடும் பணி
4. கருங்கல் சிமெண்ட் கலவை 1:5 கொண்டு சுற்றுச் சுவர் கட்டும் பணி
5. கம்பி வேலி அமைப்பதற்காக சிமெண்ட் கான்கிரீட் 1:3:6 போட்டு இரும்பு ஆங்கிள் கம்பங்கள் பொருத்தும் பணி
6. சுற்றுச் சுவற்றின் மேல் இரும்பு ஆங்கில் கம்பங்களில் கம்பி வேலி அமைக்கும் பணி
7. சாலை அமைக்கும் பகுதிகளில் தண்ணீர் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் செல்லுவதற்காக சிமெண்ட் கான்கிரீட் குழாய் அமைக்கும் பணி
8. சாலையின் கருங்கல் மணல் கலவைக்கு மேல் சிமெண்ட் கான்கிரீட் 1:5:10, 15 செ.மீ. கனத்திற்கு போடும் பணி
9. சாலையில் சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 மேல் சிமெண்ட் கான்கிரீட் 1:2:4. 15 செ.மீ கனத்திற்கு போடும் பணி
10. இரும்பு கதவு அமைக்கும் பணி
11. இரும்பு ஆங்கில் கம்பங்கள், கதவுகளுக்கு இரண்டு தடவை வர்ணம் அடிக்கும் பணி
12. சின்னங்களுக்கு செல்லும் வழியில் வழிகாட்டிப் பலகை அமைக்கும் பணி
13. பாலீஸ் செய்யப்பட்ட கருங்கல்லில் அறிவிப்பு பலகை அமைக்கும் பணி
14. பணிகள் நடைபெறும் பொழுது ஆவணப்படுத்தும் வகையில் நிழற்படங்கள் எடுக்கும் பணி

# 9. 44 ஆங்கிலேய வீரர்களின் கல்லறை - பாஞ்சாலங்குறிச்சி

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 5.90 லட்சம்



பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவில் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் இறந்துவிட்ட ஆங்கிலேய வீரர்களுடைய கல்லறை உள்ளது. இங்கு 44 வீரர்கள் அடக்கம் செய்யப் பெற்றுள்ளனர். இங்கு மூன்று விதமரன கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன. உயரதிகாரிகளுக்கு உயரமான மேடையும், சிறு அதிகாரிகளுக்கு உயரம் குறைந்த மேடையும், படைவீரர்களுக்கு உயரமான மேடையின்றி கல்லறைகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன. உயரதிகாரிகளின் கல்லறை மேடையில் மட்டும் இருகல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் ஒன்று சண்டையில் இறந்த கேப்டன் மற்றும் லெப்டினனட் ஆகியோருடைய பெயரையும் மற்றொன்று இளம் அதிகாரியின் தீரத்தையும் விளக்கிச் சொல்கிறது.

மேற்காணும் 44 ஆங்கிலேய வீரர்களின் கல்லறை, பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.65/தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத் துறை/நாள் 13.3.1987ல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இச்சின்னத்தில் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ள 12-ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ் அரசானை எண்: 15 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை நாள்.8.10.2007-இல் ரூ.5.90 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளபட்டது**

1. கல்லறைகள் இல்லாத இடத்தில் சுமார் 0.30.மீ அளவுக்கு கடக்கால் தோண்டும் பணி.
2. கடக்கால் பகுதிகளில் மணல் நிரப்பும் பணி.
3. கடக்கால் பகுதிகளில் சிமெண்ட கான்கரீட் 15:10 என்ற வீகிதத்தில் போடும் பணி.
4. கடக்கால் பகுதிகள் சிமெண்ட கான்கரீட் 1:2:4 என்ற விகிதத்தில் போடும் பணி.
5. கல்லறை பகுதிகள் செங்கல் மற்றும் கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.
6. செங்கல் கட்டுமானம் மேற்கொண்ட பகுதிகளில் கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு பூசும்பணி.
7. பூசும்பணி மேற்கொண்ட பகுதிகளில் வெள்ளை அடிக்கும் பணி.
8. எல்லை வரம்பில் கல் நடும் பணி.
9. ஏற்கனவே உள்ள கல்வெட்டினை சுத்தம் செய்யும் பணி.
10. வழிகாட்டி பலகைகள் அமைக்கும் பணி.

# 10. கட்டபொம்மன் கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 2.85 இலட்சம்



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை அமைந்துள்ளது. மதுரையிலிருந்து 155 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியில் இருந்து 153 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து 54 கி.மீ. தொலைவிலும், தூத்துக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவிலும் இக்கோட்டை அமையப் பெற்றுள்ளது. பாஞ்சாலங்குறிச்சி கிராமத்தின் மையப்பகுதியில் கட்டபொம்மன் எனவும் வீரபாண்டிய கட்டபொம்மன் எனவும் அழைக்கப்படும் மாவீரனின் கோட்டை அமைந்திருக்கிறது.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பாஞ்சாலங்குறிச்சியை 'கட்டபொம்மன்' என்ற சிறப்புப் பெயரோடு ஜமீன்தார்கள் ஆளுகை புரிந்தனர். எல்லோராலும் 'மாவீரன்' என போற்றப்படும் வீரபாண்டிய கட்டபொம்மன் என்பவன் பாஞ்சாலங்குறிச்சியில் நான்காவதாக ஆட்சிப்பீடம் ஏறியவனாவான். ஆங்கிலேயர் படையெடுப்பால் இக்கோட்டை தகர்க்கப்பட்டது.

கட்டபொம்மன் கோட்டை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.2832/கல்வித் துறை/நாள் 31.12.1976-ல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் கோட்டையின் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.2.85 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன

1. கல்யாண மகாலின் மையப் பகுதியை தவிர கட்டிடத்தில் முற்றிலும் சிதைந்துள்ள செங்கல் பகுதி கூட்டு கலவை கொண்டு ஒட்டி அளவுகள் மாறாமல் அரைக்கப்பட்ட கூட்டு கலவை வைத்து பூசப்பட்டுள்ளது.
2. சிதைந்த நிலையில் உள்ள சிற்பங்கள் தெற்குப் பகுதியில் வேலிக்குள் வைக்கப்பட்டுள்ளது
3. மழைநீர் சுலபமாக வெளியேற வடிகால் தொட்டி கட்டி (மூடியுடன்) வைக்கப்பட்டுள்ளது
4. தெற்குப் பகுதியில் மேற்கு ஓரமாக உள்ள மண் சரிவு தடுக்கப்பட்டுள்ளது
5. இரும்பு கதவுகள் சீர் செய்யப்பட்டு அதில் சுமோ கிரே வர்ணம் பூசப்பட்டுள்ளது
6. வேலி தூண்களுக்கு வலுவூட்ட கான்கிரீட் அமைத்து, மழைநீர் உள் பக்கத்திலிருந்து வெளியேற வழி அமைக்கப்பட்டுள்ளது.
7. ஆக்கிரமிப்பு செய்யாமலிருக்க எல்லையின் நான்கு மூலைகளிலும் எச்சரிக்கை பலகை அமைக்கப் பட்டுள்ளது.
8. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வரலாற்றுக் குறிப்புகள் பாலீஸ் செய்யப்பட்ட கிரானைட் கல்லில் வடிவமைத்து செங்கல் பீடம் கட்டி அதில் நிறுவப் பட்டுள்ளது.

# 11. 5 ஆங்கிலேயர் கல்லறை, ஒட்டப்பிடாரம்

மதிப்பீட்டுத் தொகை - ரூ. 0.90 இலட்சம்



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் 5 ஆங்கிலேயர் கல்லறை அமைந்துள்ளது. மதுரையிலிருந்து 125 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து 50 கி.மீ தொலைவிலும் ஒட்டப்பிடாரம் அமையப்பெற்றுள்ளது. பாலஞ்சாலங்குறிச்சி போரில் இறந்து விட்ட அதிகாரிகளின் கல்லறை இவ்வூரில் உள்ளது. கல்லறையைச் சுற்றி சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு, உட்புறம் 5 அதிகாரிகளை உள்ளடக்கிய கல்லறை செவ்வக வடிவில் பெருமேடையாக காட்சி தருகிறது. கல்லறையில் காணப்படும் கல்வெட்டொன்று வீரபாண்டிய கட்ட பொம்மனுடன் 1799-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் கர்னல் பாணர்மேன் என்பவரின் தலைமையில் நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சி யுத்தத்தின் போது இறந்துவிட்ட கும்பினி படையினரின் லெப்டினென்டுகளான டக்ளஸ், டார்மியக்ஸ், கொல்லின்ஸ், பிளேக், கன்னர்பின்னி ஆகிய ஐவரையும் நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் இது என்று குறிப்பிடுகிறது.

மேற்காணும் 5 ஆங்கிலேயர் கல்லறை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.189/தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை/ நாள். 15.6.1988-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்படி சின்னத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளுவதற்கு அரசாணை எண்.159 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2) துறை நாள்: 8.10.2007-இல் ரூ. 0.90 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது**

1. கல்லறையின் மதிற்சுவர் ஏற்கனவே உள்ளது போன்று சிமெண்ட் கலவை, கூலாங்கற்கள் கொண்டு கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.
2. கல்லறை இல்லாத பகுதிகளில் கடக்கால் தோண்டி மணல் நிரப்பும் பணியும், சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 போடும் பணி.
3. சிமெண்ட் கான்கிரீட் 1:2:4 என்ற விகிதத்தில் தரைத் தளம் அமைக்கும் பணி
4. கல்லறை பகுதிகள் மற்றும் மதிற்சுவர் மேல் பகுதியில் செங்கற்கள் மற்றும் கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.
5. கட்டுமானம் மேற்கொண்ட பகுதிகளில் கூட்டுக் கலவை கொண்டு பூசும் பணி.
6. கம்பி வேலி அமைக்கும் பணி.
7. பாலீஸ் செய்யப்பட்ட கருங்கல்லில் அறிவிப்புப் பலகை அமைக்கும் பணி.
8. ஏற்கனவே உள்ள கல்வெட்டை சுத்தம் செய்யும் பணி.
9. இரும்பு ஆங்கில் கம்பங்களில் வர்ணம் அடிக்கும் பணி.
10. பணிகள் ஆவணப்படுத்தும் வகையில் பணிகள் நடை பெறும் பொழுது நிழற்படங்கள் எடுக்கும் பணி.

# 12. கட்டபொம்மன் கோட்டை, கமுதி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 14.60 இலட்சம்



இராமநாதபுரம் மாவட்டம் கமுதியின் வடக்கில் ஓடும் குண்டாறு என்னும் சிற்றாற்றின் வடகரையில் 250 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ளது கட்டபொம்மன் கோட்டை.

இராமநாதபுரம் சீமையை ஆட்சி செய்த திருஉடையாத் தேவர் என்னும் விஜய ரகுநாத சேதுபதியால் (கி.பி.1711-1725) கட்டப்பட்டது. இக்கோட்டை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பொறியாளரின் உதவியுடன் இக்கோட்டை கட்டப்பட்டது. இக்கோட்டை அளவில் சிறியதாக இருந்தாலும் இரண்டு வரிசைக் கற்சுவர்களுடன் கூடியது. இராமநாதபுரம் ஜமீனுக்குரிய இக்கோட்டையை பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்கு பின் 25.08.1801-இல் கிழக்கிந்தியக் கம்பெனி தன் வசப்படுத்திக் கொண்டது. மருது சகோதரர்களின் தலைமையில் சிவகங்கைப் படைகள் இக்கோட்டையைக் கைப்பற்றி சிலகாலம் ஆண்டனர்.

ஆனால் மிக விரைவில் கம்பெனியார் மீட்டதுடன் கோட்டையையும் இடித்தனர். 09.09.1878-இல் ஜாக்சன் துரையைச் சந்திப்பதற்காக வீரபாண்டியக் கட்டபொம்மன் இராமநாதபுரம் வந்த போது ஒரு நாள் இக்கோட்டையில் தங்கிச் சென்றதால் இக்கோட்டை கட்டபொம்மன் கோட்டை என உள்ளூர் மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டபொம்மன் கோட்டை பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண்.1659, கல்வித்துறை, நாள் 29.08.1983-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இச்சின்னத்தில் 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற் கொள்ளுவதற்கு அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல் ரூ. 14.60 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப்பெற்றன.

1. கோட்டையைச் சுற்றியும், உட்புறமும் வளர்ந்துள்ள செடி, கொடிகளை அகற்றும் பணி.
2. செங்கல், கூட்டுக் கலவை கொண்டு கோட்டை கைப்பிடி சுவர் மற்றும் கொத்தளங்கள் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.
3. கருங்கல் கலவை கொண்டு சுவற்றின் உட்புறம் வெற்றிடங்கள் நிரப்பும் பணி.
4. கோட்டையின் பகுதிகள் அடிப்பக்கம் மண்ணில் புதைந்திருந்ததை மண்தோண்டி வெளிக் கொணர்ந்து கருங்கல், கூட்டுக் கலவை கொண்டு கடக்கால் பகுதிகள் திடப்படுத்தும் பணி.
5. கருங்கல் கட்டுமானம் மேற்கொண்ட பகுதிகள் கூட்டுக் கலவை கொண்டு பாயிண்டிங் செய்யும் பணி.
6. மேடு, பள்ளமாக இருந்த படிக்கட்டுகள் சரி செய்யும் பொருட்டு செங்கல் ஜல்லி, சுண்ணாம்புக் கலவை கொண்டு நிரப்பும் பணி.

7. கருங்கல், கூட்டுக் கலவை கொண்டு கைப்பிடிச் சுவர், படிக்கட்டுகள் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.
8. கூட்டுக் கலவை கொண்டு படிக்கட்டுகள் பூசும் பணி.
9. கோட்டையின் வெளிப்புறம் விரிசல் இருந்த பகுதிகள் கூட்டுக் கலவை கொண்டு கிரவுட்டிங் செய்யும் பணி.
10. குட்டைச் சுவர் கட்டுமானம் மேற்கொள்வதற்கான மண் தோண்டி எடுக்கும் பணி, மணல் நிரப்பும் பணி, சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 போடும் பணி, கருங்கல் சிமெண்ட் கலவை கொண்டு சுவர் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி, கட்டுமானத்தில் சிமெண்ட் கலவை கொண்டு பாயிண்டிங் செய்யும் பணி.
11. குட்டைச் சுவரின் மேல் கான்கிரீட் கொண்டு இரும்பு ஆங்கில் கம்பங்கள் பொருத்தும் பணி, ஆங்கில் கம்பங்களில் கம்பி வேலி அமைக்கும் பணி.
12. இரும்பு கதவு அமைக்கும் பணி.
13. பாலீஸ் செய்யப்பட்ட கருங்கல்லில் அறிவிப்பு பலகை பொருத்தும் பணி.
14. பணிகள் நடைபெறும் பொழுது ஆவணப்படுத்தும் வகையில் நிழற்படங்கள் எடுக்கும் பணி.

# 13. இரட்டைக் கோயில், கீழையூர்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 16.00 இலட்சம்



சென்னையிலிருந்து 342 கி.மீ. தொலைவிலும், தஞ்சையில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவிலும் அரியலூர் வட்டத்தில் கீழையூர் இரட்டைக் கோயில் உள்ளது.

இந்த இரட்டைக் கோயில் அவனிகந்தர்ப்ப ஈஸ்வரர் கோயில் என்றும் அவனிகந்தர்ப்ப ஈஸ்வரர் கிருஹம் என்றும் அழைக்கப்படுகிறது. இரு கோயில்கள் அடுத்தடுத்து ஒற்றை மதிலை அரணாகக் கொண்டு உள்ளன. இப்பெயர்கள் அங்குள்ள கல்வெட்டு வாயிலாக அறியப்படுகின்றன. இக்கோயிலின் பெயர்களும் தற்பொழுது முறையே 'தென்வாயில் சிவகோயில்' (அகஸ்தீஸ்வரர் கோயில்) என்றும் 'வடவாயில் கோயில்' (அருணாசலேஸ்வரர் கோயில்) என்றும் அழைக்கப்பெறுகின்றன.

இக்கோயிலின் கலைப்பாணி சோழர் காலத்தின் கட்டடக் கலைப்பாணியாகும். அதாவது முதலாம் ஆதித்திய சோழன் காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கோயிலில் மேற்கு நோக்கிய நுழைவு வாயிலில் அமைந்துள்ள இரு துவாரபாலகர் சிலைகள் கி.பி.9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் அருணாச்சல ஈஸ்வர கோயில் அமைந்துள்ளது. அதே கால கட்டத்தில் இக்கோயிலின் அர்த்தமண்டபத்திற்கு முன் இரு துவாரபாலகர் சிலைகள் உள்ளது. கருவறையைச் சுற்றியுள்ள தேவகோட்டத்தில் பிரம்மா, தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர் ஆகிய கற்சிற்பங்கள் சோழர் காலச் சிற்பத்திறனை உணர்த்துகின்றன.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தமிழ்நாடு அரசால் அரசாணை எண்.2832, கல்வித்துறை, நாள் 31.12.1976-இல் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இச்சின்னத்தில் 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற் கொள்ளுவதற்கு அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல் ரூ.16.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப்பெற்றன.

1. பிள்ளையார் கோயில், முருகன் கோயில் மேல்கோபுரம் செடிகள் சுத்தம் செய்து பூசப்பட்டுள்ளது. முன்மண்டபம் கூரை தள ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. தரையில் சிமெண்ட் பூச்சு பூசப்பட்டுள்ளது. சுற்றுப்புற உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டு இரண்டிற்கும் கதவு பொருத்தப்பட்டுள்ளது.
2. கோயிலின் முன் முகப்பு கோபுரம் செடிகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள பக்கவாட்டு சுவர் பூசப்பட்டுள்ளது.
3. மதிற்சுவரில் மேல்மட்ட செங்கல் சுவர் பூசப்பட்டுள்ளது. கீழேயுள்ள கருங்கல் சுவர் சந்து பூசப்பட்டுள்ளது. ஆங்கில் மற்றும் கம்பி வலை சுமார் 110 ஆங்கில் 6' அடி உயரத்தில் போடப்பட்டுள்ளது.
4. அம்மன் கோயில் மேல் கோபுரத்தில் செடிகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஐந்து சிலைகள் சுதைவேலை செய்யப்பட்டுள்ளது . முன்மண்டபம்

கூரையில் தள ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. கதவு போடப்பட்டுள்ளது. உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது.

5. அண்ணாமலையார் கோயில் கல் கோபுரத்தில் செடிகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. மண்டபம் கூரை தள ஓடுகள் போடப்பட்டுள்ளது. உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது. கருவறையில் மரபலகையால் சீலிங் அடிக்கப்பட்டுள்ளது. கதவு பொருத்தப்பட்டுள்ளது.
6. வெல்டுமெஸ் கிரில் போட்டு கிணறு மூடப்பட்டுள்ளது.
7. கோயில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேற தகுந்த சாக்கடை வசதிகள் கிணறு வரை அமைக்கப்பட்டுள்ளது
8. செங்கல் சுவரால் அமைக்கப்பட்ட சதுர மேடையில் பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.
9. சூரிய நாராயணார் கோபுரத்தில் வளர்ந்துள்ள செடிகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. கோபுரம் பூசப்பட்டது. மண்டபம் கூரையில் தள ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. கதவு போடப்பட்டுள்ளது. உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது.
10. மடப்பள்ளி கூரையில் தள ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. உள், வெளி சுவர்கள் பூசப்பட்டுள்ளது. தரையில் சிமெண்ட் தளம் போடப்பட்டுள்ளது. கதவு போடப்பட்டுள்ளது.
11. சப்த மாதர்கள் கோபுரத்தில் செடிகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்டு பூசப்பட்டுள்ளது. மண்டபம் கூரை தள ஓடுகள் போடப்பட்டுள்ளது. உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது. உள் தளம் சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. கதவு போடப்பட்டுள்ளது.
12. அகஸ்தீஸ்வரர் கோயில் உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது. மண்டபம் கூரை தள ஓடுகள் பதியப்பட்டுள்ளது. வெல்டுமெஸ் பிக்சட் கிரில் கதவு இரண்டு பொருத்தப்பட்டுள்ளது. கருவறையில் மரப்பலகையால் சீலிங் பொருத்தப்பட்டுள்ளது.

13. தட்சிணாமூர்த்தி உள், வெளி சுவர்கள் சந்து பதியப்பட்டுள்ளது. மண்டபம் கூரை தள ஓடுகள் போடப்பட்டுள்ளது. தரை பகுதியில் சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. கதவு பொருத்தப்பட்டுள்ளது.
14. ஆழ்குழாய் கிணறு ஒன்று போடப்பட்டுள்ளது.
15. முன் முகப்பு மதிற்சுவரில் பிரதான கிரில் கேட் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

# 14. திருநீலகண்டம், பனஞ்சாடி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 4.00 இலட்சம்



திருநெல்வேலி மாவட்டத்தில் பனஞ்சாடி என்னும் ஊரில் திருநீலகண்டம் கோயில் அமைந்துள்ளது. இவ்வூர் அம்பாசமுத்திரம் - தென்காசி சாலையில் உள்ளது. இக்கோயில் மொட்டையாண்டவர் கோயில் என்றும் திருநீலகண்டர் கோயில் என்றும் மக்களால் அழைக்கப்படுகிறது. இது முற்காலப் பாண்டியர் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.27/ தமிழ்வளர்ச்சி – பண்பாட்டுத்துறை /நாள் 31.1.1991-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் கோயிலின் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும்

பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.4.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. கோயிலைச் சுற்றிலுமுள்ள மண்மேடுகள் யாவும் நீக்கப் பட்டு கோயிலைச் சுற்றிலும் ஒரு மீட்டர் அகலத்திற்கு மண் பாதவரி வரை தோண்டப்பட்டது.
2. சுற்றிலுமுள்ள பகுதிகளில் கோயில் கற்கள் கண்டெடுக்கப்பட்டு அவையாவும் அடுக்கி வைக்கப்பட்டன
3. கோயிலின் அதிஸ்டான பகுதி முழுவதும் வெளியில் தெரியுமளவுக்கு மண் எடுக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு கூட்டுக் கலவை கொண்டு பூச்சு வேலை செய்யப் பட்டுள்ளது.
4. கபோதகம் வியாழ வரிக்கற்கள் எண்ணிடப்பட்டு நீக்கப்பட்டு கீழே தளத்தில் அடுக்கி வைக்கப்பட்டன.
5. வெளிவரிக்கற்கள் எண்ணிடப்பட்டு நீக்கப்பட்டன. அவை முறையாக அடுக்கி வைக்கப்பட்டு, காணாமற் போன கற்கள் அவற்றுக்கேற்ப தேடியெடுக்கப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு அவை மீண்டும் வரிக்கற்கள் வரிசையில் நிறுவப்பட்டன.
6. முன்னதாக செங்கல், சுண்ணாம்பு கலவை கொண்டு உள்வரி மற்றும் வெளிவரிக்கு இடைப்பட்ட பகுதி நிரப்பிடப்பட்டது.
7. நந்தி கோயிலின் முன்புறம் கற்பீடத்தின் மீது நிறுவப் பட்டது.
8. விமானம் மீண்டும் கூட்டுக் கலவை கொண்டு சீர் செய்யப்பட்டது.
9. கோயிலின் நிலைக்கல்லானது மீண்டும் தன் நிலைக்கு கொண்டு வரப்பட்டு நிறுவப்பட்டது, கோயில் வடிவ மரக்கதவு பொருத்தப்பட்டது.

10. கருவறையினுள் முட்டு கொடுக்கும் அமைப்பு நீக்கப்பட்டதும் பாவுக்கற்கள் கற்தளம் அமைக்கப் பட்டது.

11. கோயிலின் உட்புற கூரைப்பகுதி மரத்திலான பலகை கொண்டு மூடப்பட்டும், அதன் செருகு பகுதியாவும் கூட்டுக் கலவை செங்கற்கள் கொண்டு சீர் செய்யப்பட்டன.

12. கோயிலின் முன்புறத்தில் கற்கட்டுமான சுவற்றின் மீது இரும்பினாலான கதவு நிறுவப்பட்டது.

13. கோயிலைச் சுற்றிலும் கற்கட்டுமான சுவர் எழுப்பப்பட்டு, அவற்றின் மீது கற்தூண்கள் ஊன்றப்பட்டு முள்கம்பி வேலியிடப்பட்டது.

14. கருவறையினுள் இரசாயன முறையில் அழுக்கு தூசு நீக்கப்பட்டது.

15. கோயிலின் உடைந்திருந்த கோமுகக்கல் துளையிடப் பட்டு அதிற் இரும்பு கம்பி சொருகி காரீயம் திரவ நிலையில் ஊற்றி பலப்படுத்தி உடைந்த கோமுகக்கல் மீண்டும் அதே முறையில் ஒட்டப்பட்டது.

16. கோயிலின் வரலாற்றுக் குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கிரானைட் கல்லில் செதுக்கி செங்கற்பீடம் அமைத்து வைக்கப்பட்டது.

# 15. வழிப்போக்கர் மண்டபம், தாங்கி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 6.25 இலட்சம்



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் வட்டத்தில் தாங்கி என்னும் ஊரில் வழிப்போக்கர் மண்டபம் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் வாலாஜாபாத் வழியாக காஞ்சிபுரம் செல்லும் சாலையில் தாங்கி என்னும் ஊரின் சாலை ஓரத்தில் கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. இது வழிப்போக்கர் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இம்மண்டபம் இரண்டு பகுதிகளாக காணப்படுகிறது. உட்புற மண்டபத்தின் மேற்குச் சுவரில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு இந்த வழிப்போக்கர் மண்டபம் கி.பி.1777-இல் தித்தர் செட்டி, முக்கர் செட்டி என்பவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது.

இந்த வழிப்போக்கர் மண்டபம் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண். 83, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை,

நாள் 23.3.1987-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ் வழிப்போக்கர் மண்டபத்தின் பாதுகாப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல் ரு.6.25 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. மண்டபத்தினை சவுக்கு மரம் கொண்டு முட்டுக் கொடுக்கும் பணி.
2. செங்கல் கட்டுமான கைப்பிடி சுவர் அகற்றும் பணி.
3. வெதரிங் கோர்ஸ் அகற்றும் பணி.
4. பாவுக்கல்லுக்கு எண் இடப்பட்டு, பிரித்து எடுக்கும் பணி.
5. கபோதகம் மற்றும் வியாழம் வரிக்கற்கள் பிரித்து எடுக்கும் பணி.
6. மண்டபத்தின் உள் மற்றும் வெளி வரிக்கற்கள் எண் இடப்பட்டு பிரிக்கும் பணி.
7. கருங்கல் தூண்கள் மற்றும் உத்திரம் பிரித்து எடுக்கும் பணி.
8. கடக்கால் பகுதிகள் தோண்டி எடுத்துவிட்டு சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 கொண்டு திடப்படுத்தும் பணி.
9. உள் மற்றும் வெளி வரிக்கற்கள் கூட்டுக் கலவை 1:1:5 கொண்டு மீண்டும் அடுக்கி வைக்கும் பணி.
10. செங்கல் ஜல்லி மற்றும் கூட்டுக்கலவை கொண்டு வரிக்கற்களின் இடைப்பட்ட பகுதிகள் அடைக்கும் பணி.
11. பாவுக்கல், கருங்கல் தூண்கள் மற்றும் உத்திரகற்கள் கூட்டுக் கலவை கொண்டு பொருத்தும் பணி.
12. பாவுக்கற்களின் இடைப்பட்ட பகுதிகளில் சிறிய கருங்கல் ஜல்லி, சிமெண்ட் கலவை கொண்டு அடைக்கும் பணி.

13. செங்கல் ஜல்லி, கூட்டுக் கலவை கொண்டு வெதரிங் கோர்ஸ் அமைக்கும் பணியும், அதன் மேல் பகுதியில் கூட்டு கலவை கொண்டு தள ஓடுகள் அமைக்கும் பணி

14. செங்கற்கள் மற்றும் கூட்டுக் கலவை கொண்டு சுற்று கைப்பிடிச்சுவர் கட்டும் பணியும், கூட்டுக் கலவை கொண்டும் பூசும் பணி.

15. மண்டபத்தின் உள்புறம் கருங்கல் தளம் அமைக்கும் பணி.

16. மண்டபத்தின் முன் பகுதியில் கருங்கல் சுவர் கட்டும் பணியும், அதன் மேல் இரும்பு ஆங்கில் கம்பங்கள் பொருத்தும் பணியும், கம்பிவேலி அமைக்கும் பணி.

17. இரும்பு கதவு அமைக்கும் பணி.

18. ஆங்கில் கம்பங்கள் மற்றும் இரும்பு கதவுகள் ஆகியவற்றிற்கு கலர் வர்ணம் அடிக்கும் பணி.

19. கைப்பிடிச் சுவருக்கு கலர் வெள்ளை அடிக்கும் பணி.

# 16. சப்தமாதர் சிற்பங்கள், பெருங்காஞ்சி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 1.00 இலட்சம்



வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டத்தில் பெருங்காஞ்சி என்னும் ஊரில் சப்தமாதர் சிற்பங்கள் உள்ளன. இவ்வூரில் பிற்கால பல்லவர் கால சிற்பங்கள் உள்ளன. சப்தமாதர் குழுவில் விநாயகர், வீரபத்ரர், பிராமி, மகேசுவரி, வைஷ்ணவி, கௌமாரி, இந்திராணி, வாராகி, சாமுண்டி, சூரியன், குலதேவர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. இவை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

இச்சப்தமாதர் சிற்பங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.2837, கல்வித்துறை, நாள் 31.12.1981-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.159, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை, நாள் 8.10.2007-இல், 12-ஆவது

நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித்துறை மூலம் பெருங்காஞ்சி சப்தமாதர் சிற்பங்கள் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.1.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. செடி, கொடிகளை அகற்றும் பணி.
2. ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த கம்பி வேலியினை அகற்றி எடுத்துவிட்டு, சிமெண்ட் கான்கிரீட் போட்டு, கருங்கல் சுவர் கட்டும் பணியும், அதன் மேல் இரும்பு ஆங்கில் பொருத்தும் பணி, கம்பிவேலி அமைக்கும் பணி.
3. இரும்பு ஆங்கில் கம்பங்கள், இரும்பு கதவுகள், அறிவிப்பு பலகைகள் ஆகியவற்றிற்கு வர்ணம் அடிக்கும் பணி.
4. ஏற்கனவே உள்ள கருங்கல் சுவர்களுக்கு வெள்ளை அடிக்கும் பணி.

# 17. அகஸ்தீஸ்வரர் கோயில், பெருங்குடி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 3.00 இலட்சம்



திருச்சி மாவட்டத்தில் உள்ள பெருங்குடி என்னும் ஊரில் அகஸ்தீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு காணப்படுவதால், சுந்தரசோழன் காலத்தில் எழுப்பப் பெற்றதாகக் கருதலாம். இக்கோயிலில் உள்ள கற்சிற்பங்கள் முற்காலச் சோழர்களின் கலைப்பாணியை வெளிப்படுத்துகின்றன.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.1109/ கல்வித் துறை/ நாள் 17.6.1978-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலின் பாதுகாப்பு பணியினை 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்ளுவதற்கு அரசாணை (நிலை) எண்.159/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (அ.தொ.2)துறை/ நாள் 8.10.2007-இல் ரூ.3.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. சேதமடைந்த செங்கல் சுண்ணாம்பு காரை மற்றும் தரை ஓடுகள் முழுவதுமாக நீக்கப்பட்டு மகாமண்டபம் மற்றும் வெளி மண்டபங்களில் கருங்கல் தளம் அமைக்கப்பட்டது. கருவறையின் உட்புறம் மரப்பலகைகள் கொண்டு நன்றாக சீலிங் அடிக்கப்பட்டது.
2. மகாமண்டபம், சுவாமி சன்னதி ஆகியவற்றின் மேல் பகுதியில் செங்கற்கள் சிமெண்ட் கலவை 1:5 என்ற விகிதத்தில் கலந்து சிதலமடைந்த பகுதிகள் சீர் செய்யப்பட்டன.
3. வெளி சுற்றுச் சுவர்களுக்கான அஸ்திவாரம் பறித்தல் மற்றும் மணல் இடுதல், கருங்கல் ஜல்லி கற்கள் 1:5:10 கலவையில் அரளை கற்கள் பதித்தல் ஆகிய வேலைகள் முடிவுற்றுள்ளன.
4. மகாமண்டபம் மற்றும் வெளி மண்டபத்தில் பழைய சேதமடைந்த சுண்ணாம்பு செங்கல் கலவை அகற்றப்பட்டு, புதிய சுண்ணாம்பு செங்கல் கலவை இடப்பட்டுள்ளன.
5. 3" X 3" - 10 செயின் லிங்க் கம்பி வேலி புதியதாக அமைக்கப்பட்டன.
6. எம்.எஸ். ஆங்கில் கம்பங்களில் எனாமல் பெயிண்ட் இரண்டு தடவை அடிக்கப்பட்டது.
7. விமானம் பகுதியில் உள்ள கொடுங்கை கற்கள் தனியாக அகற்றப்பட்டு மீண்டும் அதே இடத்தில் சரியான அமைப்பில் பொருத்தப்பட்டு சுண்ணாம்பு கலவையால் பூசப்பட்டது.
8. வேலை நடைபெறும் முன்னரும், நடைபெறும் பொழுதும், நடைபெற்று முடிந்த பின்னரும் தகுந்த நிழற்படங்கள் எடுக்கப்பட்டன.
9. கிரானைட் கல் தகவல் பலகை ஒன்று அமைக்கப்பட்டது.

# 18. ஸ்வஸ்திகா கிணறு, திருவெள்ளரை

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 2.50 இலட்சம்



திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் திருவெள்ளரை என்னும் ஊரில் "ஸ்வஸ்திக் கிணறு" அமைந்துள்ளது. இந்த ஸ்வஸ்திகா கிணறு பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் கி.பி.800-இல் ஆலம்பாக்கத்து விசையநல்லுரான் தம்பி கம்பன் அரையன் என்பவனால் தோண்டி அமைக்கப்பட்டது. இக்கிணற்றின் சுவரில் காணப்படும் பாடல் கல்வெட்டு வாழ்க்கை நிலையைப் பற்றி கூறும் அரிய கல்வெட்டாகும்.

இந்த ஸ்வஸ்திகா கிணறு பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.2832/கல்வித்துறை/நாள் 31.12.1976-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இப்பாதுகாக்கப்பட்ட சின்னத்தில் 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும்

பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ. 2.50 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. கிணற்றின் உள்ளே நான்கு புறங்களிலும் உள்ள பழைய சுண்ணாம்பு காரைகள் அகற்றப்பட்டன.
2. கிணற்றுக்கு செல்லும் வழியில் உள்ள செடி கொடிகள் முழுவதுமாக அகற்றப்பட்டன.
3. நுழைவு வாயில் கதவு அமைக்க அஸ்திவாரம் தோண்டி, மணல் பரப்பி, சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 என்ற கலவையில் கருங்கல் ஜல்லி கொண்டு பரப்பப்பட்டது.
4. கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் நுழைவு வாயில் கதவு அமைக்க செங்கல் சுவர் கட்டப்பட்டது.
5. கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் கிணற்றின் உள்புறம் சுவர்கள் முழுவதுமாக பூசப்பட்டது.
6. கிணற்றின் உள்புற சுவர்கள், படிக்கட்டுகள் மற்றும் படிக்கட்டின் அமர்வு பகுதி ஆகிய இடங்களில் சந்து பதித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
7. கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் 4" கனமுடைய கல் கிணற்றின் நான்கு புறமுள்ள நுழைவு வாயில்களில் அமைக்கப்பட்டது.
8. வரிவர்க்கத்தில் உள்ள கற்கள் சீரமைக்கப்பட்டது.
9. தகவல் பலகை மற்றும் முள்வேலிக் கம்பியில் உள்ள எம்.எஸ். ஆங்கில் ஆகியவற்றிற்கு எனாமல் பெயிண்ட் இரண்டு தடவை அடிக்கப்பட்டது.
10. வேலை நடைபெறும் முன்னரும், நடைபெறும் பொழுதும், நடைபெற்ற முடிந்த பின்னரும் தகுந்த நிழற்படங்கள் எடுக்கப்பட்டது.

# 19. அஸ்தகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 0.95 இலட்சம்

ASTHAGIRISWARAR KOIL



மதுரை மாவட்டம் வரிச்சியூர் மலையில் மேற்குசரிவில் அஸ்தகிரீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் சிறிய கருவறை மட்டும் கொண்ட எளிய பாண்டியர் காலத்து கோயிலாகும். இதனருகில் நீலகண்டேசுவரர் என்னும் குடைவரைக் கோயில் உள்ளது. இது கருவறை, முகமண்டபத்துடன் கூடியது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.1109/கல்வித் துறை/நாள் 17.6.1978-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் கீழ்காணும் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.0.95 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. சின்னம் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் செடி கொடிகள் வேரோடு அகற்றப்பட்டது.
2. சின்னத்தின் முன்புறத்தில் கற்கட்டுமான சுவற்றின் மீது இரும்பிலான ஆங்கில் ஊன்றப்பட்டு அவற்றோடு இணைத்து முள்கம்பி வேலி அமைக்கப்பட்டது. பிற பக்கங்களிலும் ஆங்கில்கள் ஊன்றப்பட்டு முள் கம்பி வேலி அமைக்கப்பட்டது.
3. சின்னத்திற்கு செல்லும் முன் பகுதியில் இரும்பாலான கதவு அமைக்கப்பட்டது.
4. இக்கதவு வைப்பதற்காக செங்கற் கட்டுமானத்தாலான சதுர தூண்களும் கட்டப்பட்டது.
5. இரசாயன முறையில் குடைவரைப் பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டது.
6. பணிகள் முறையாக நிழற்படம் மூலம் ஆவணப் படுத்தப்பட்டது.

# 20. உதயகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 1.00 இலட்சம்



மதுரை மாவட்டத்தில் உள்ள வரிச்சியூர் மலையின் கிழக்கு சரிவில் உதயகிரீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இது ஒரு குடைவரைக் கோயிலாகும். சிறிய கருவறை மட்டும் கொண்டுள்ள இச்சிவன் கோயில் எளிமையான அமைப்புடையது. இது முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைக்கு சான்றாக விளங்குகிறது. உட்புறம் சிவலிங்கம் மட்டும் இயற்கையான பாறையில் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய மலையாக இருப்பதால் இக்கோயில் இறைவன் உதயகிரீஸ்வரர் என அழைக்கப்படுகிறார்.

வரிச்சியூர் உதயகிரீஸ்வரர் கோயில் பாதுகாக்கப் பட்ட சின்னமாக அரசாணை எண்.1109/கல்வித் துறை/நாள் 17.6.1978-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலின் பாதுகாப்பு பணிகளை 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை

(நிலை) எண்.159/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/ நாள் 8.10.2007-இல் ரூ.1.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. சின்னத்தை சுற்றிலும் காணப்படும் செடி கொடிகள் வேரோடு அழிக்கப்பட்டது.
2. சின்னத்தின் முன்புறத்தில் கற்கட்டுமான சுவற்றின் மீது இரும்பினாலான ஆங்கில் ஊன்றப்பட்டு அவற்றோடு இணைத்து முள்கம்பி வேலி அமைக்கப்பட்டது. பிற பக்கங்களிலும் ஆங்கில்கள் ஊன்றப்பட்டு முள் கம்பி வேலி அமைக்கப் பட்டது.
3. சின்னத்திற்கு செல்லும் முன் பகுதியில் இரும்பினாலான கதவு அமைக்கப்பட்டது.
4. இக்கதவு வைப்பதற்கான செங்கற் கட்டுமானத்தினாலான சதுர தூண்கள் கட்டப்பட்டது.
5. இரசாயன முறையில் குடைவரைப் பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டது.
6. பணிகள் முறையாக நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்தப்பட்டது.

# 21. முருகன் கோயில் மற்றும் சமணப்படுக்கைகள், வரிச்சியூர்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 1.00 இலட்சம்



மதுரை மாவட்டத்தில் உள்ள வரிச்சியூர் மலையில் முருகன் கோயில் அமைந்துள்ளது. மதுரையிலிருந்து சிவகங்கைக்குச் செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கில் ஒரு கி.மீ. தொலைவில் ஒரு சிறிய குன்று உள்ளது. இக்குன்றின் ஒரு பகுதியில் சமணத்துறவியர் வாழ்ந்தமைக்கான கற்படுக்கைகள் உள்ளன. இக்குகையின் நெற்றியில் மூன்று பிராமிக் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டு படுக்கைகள் மற்றும் முருகன் கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.1109/கல்வித் துறை/நாள் 17.6.1978-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேற்படி சின்னத்தில் பாதுகாப்பு பணிகள் பொதுப் பணித்துறை மூலம் மேற்கொள்ள 12-ஆவது நிதிக்குழு

மானியத்தின் கீழ் ரூ.1.00 இலட்சம் அரசாணை (நிலை) எண்.159/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. சின்னம் உள்ள பகுதியில் செடி, கொடிகள் வேரோடு அழிக்கப்பட்டது.
2. சுற்றுப் பகுதியில் கற்சுவர் எழுப்பப்பட்டு, இரும்பினாலான கம்பங்கள் நிறுவப்பட்டு அதில் முள்கம்பி வேலி கட்டப்பட்டது.
3. முன் பகுதியில் இரும்பினாலான கதவு ஒன்று அமைக்கப் பட்டது.
4. கோயிலில் உள்ள திறப்புப் பகுதியில் பறவைகள் புகா வண்ணம் கம்பிவலை அமைக்கப்பட்டது.
5. கற்படுக்கைப் பகுதிகள் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்டது.

# ௨௨. பிராமிக் கல்வெட்டுகள், கருங்காலக்குடி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 2.45 இலட்சம்



மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் கருங்காலக்குடி என்னும் ஊரில் இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன. மதுரையிலிருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் மேலூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கில் அமைந்த குன்றில் இயற்கையான குகையில் சமணத்துறவியர் தங்கியிருந்த கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இக்குகையின் நெற்றியில் தமிழ் பிராமி கல்வெட்டு ஒன்று உள்ளது.

இக்குகைக்கோயில் சிற்பங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.7/தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை/நாள் 6.1.1990-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் சின்னத்தில் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண். 159/சுற்றுலா மற்றும்

பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.2.45 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. சின்னத்தின் முன்பு காங்கிரீட் கொண்டு தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டது.
2. சின்னத்தின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் தேவையான இடங்களில் மதிப்பீட்டிலுள்ளவாறு கற்கட்டுமான சுவற்றின் மீதும், பாறையின் மீதும் கற்கள் ஊன்றப்பட்டு முள்வேலி கம்பி கட்டப்பட்டது.
3. செல்லும் வழிப்பாதையில் சிமென்ட் காங்கிரீட் தளம் அமைக்கப்பட்டது.
4. சின்னம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பாலீஸ் செய்யப்பட்ட கிரானைட் கல்லில் செதுக்கி செங்கற் கட்டுமான பீடத்தில் நிறுவப்பட்டது.
5. பிராமிக் கல்வெட்டுக்கு தடுப்பு கம்பிவலை திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டது.
6. சாலையிலிருந்து இச்சின்னத்திற்கு செல்லும் வழிப்பாதையில் இரும்பினாலான கதவு பொருத்தப் பட்டது.
7. இரசாயன முறையில் சின்னப்பகுதிக்குள் தூய்மை செய்யப்பட்டன.

# 23. குகைக்கோயில் சிற்பங்கள், ஐவர்மலை, தாதநாயக்கன்பட்டி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 6.60 இலட்சம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் தாதநாயக்கன்பட்டி என்னும் ஊரில் ஐவர்மலையில் குகைக்கோயில் சிற்பங்கள் அமைந்துள்ளது. இம்மலையின் ஒரு பகுதியில் இயற்கையாக அமைந்த குகைத்தளத்தில் சமணத் துறவியர் வாழ்ந்துள்ளனர். மலையின் நெற்றியில் சமணத் தீர்த்தங்கரர் சிலரின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் அதனைச் செய்து வைத்தவர்களின் பெயர்கள் வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்குகைக்கோயில் சிற்பங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.150/தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை/நாள் 17.5.1989-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் குகைகோயில் சிற்பங்கள் பாதுகாப்பு பணிகளை பொதுப் பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/ சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.6.60 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. பணிகள் நடைபெறும் முன்னரும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், நடைபெற்று முடிந்த பின்னரும் தகுந்த நிழற்படங்கள் எடுத்து பணி நிறைவு சான்றிதழுடன் ஆல்பமாகக் கொடுக்கப்பட்டது.
2. 1:3:6 விகிதத்தில் சிமெண்ட் கான்கிரீட் கலவையில் 1:5 சிமெண்ட் கலவையில் அரளைக் கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ள வேலிச் சுவற்றின் மீது 2" X 2" செயின்லிங்க் வலை 1.50 மீட்டர் உயரத்திற்கு பொருத்தப்பட்டது.
3. 0.90 மீட்டர் X 1.80 மீட்டர் அளவுள்ள இரண்டு கதவுகள் கொண்ட இரும்பு எம்.எஸ், ஆங்கில் கதவு ஒன்று தகுந்த எம்.எஸ்.பட்டைகள் கொண்டு 35 செ.மீ. 40 செ.மீ. இடைவெளிவிட்டு 16 மி.மீ. பிளைன் கம்பி செங்குத்தாக 10 செ.மீ. இடைவெளி விட்டு தகுந்த பூட்டும் வசதியுடன் அமைக்கப்பட்டது.
4. சிற்பங்களின் மீது படிந்திருக்கும் கறைகளை முற்றிலும் அகற்ற தகுந்த இரசாயனம் கொண்டு சுத்தம் செய்யப்பட்டது.
5. எம்.எஸ். ஆங்கில், கதவு அனைத்தும் ஸ்மோக் கிரே கலரில் எனாமல் பெயிண்ட் இரண்டு தடவை அடிக்கப் பட்டது
6. பாலீஸ் செய்யப்பட்ட கருப்பு கிரானைட் தகவல் பலகை ஒன்று 0.90 மீட்டர் X 1.20 மீட்டர் அளவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறுவப்பட்டுள்ளது.

7. 0.20 மீட்டர் X 0.50 மீட்டர் அளவுள்ள இரண்டு வழிகாட்டுப் பலகைகள் பிரதான சாலையிலும் கிராமத்தின் உள்புறமும் நிறுவப்பட்டது.
8. 35.00 மீட்டர் X 8.00 மீட்டர் பரப்பளவில் சிமெண்ட் கலவை 1:5 என்ற விகிதத்தில் சந்து பதியப்பட்டு, செங்கல் ஜல்லி கொண்டு நிறுவப்பட்ட செட்டின் அருகில் உள்ள முன்புறத்தில் தள கற்கள் பதிக்கப்பட்டது.

# 24. ஸ்ரீகைலாயமுடையார் கோயில், சோழமாதேவி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 9.00 இலட்சம்



திருச்சி மாவட்டத்தில் சோழமாதேவி என்னும் ஊரில் ஸ்ரீகைலாயமுடையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் இராஜராஜ சோழன், இராசேந்திர சோழன், வீரராசேந்திர சோழன் ஆகியோர் காலத்து கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயில் உபானம் முதல் கபோதகம் வரை கல்லினால் கட்டப்பட்டுள்ளது. சன்னதி, அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகியவை இக்கோயிலில் உள்ளது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.362/தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை/நாள் 8.12.2004-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் கோயிலின் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும்

பண்பாட்டுத்(அற.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.9.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன

1. கோயிலின் எல்லைக்குள் வளர்ந்துள்ள செடி கொடிகள் முற்றிலுமாக அகற்றப்பட்டது.
2. கோயிலின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் விளைவிக்காமல் கோபுரத்தின் மேல் உள்ள கபோதகத்தில் பழைய செங்கல் சுவர்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டது.
3. கோபுரத்தின் மேல் உள்ள பழைய சுண்ணாம்பு செங்கல் கலவை முற்றிலுமாக அகற்றப்பட்டது.
4. மகாமண்டபம் மற்றும் அம்மன் மண்டபத்தின் கூரைக் கற்கள் எண் இடப்பட்டு அவைகள் கீழிறக்கப்பட்டு அடுக்கப்பட்டது.
5. கல் தூண்கள் மற்றும் போதியில் உள்ள கற்கள் செதுக்கப்பட்டு அவைகள் அதனுடைய பகுதியில் பொருத்தப்பட்டது.
6. கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் செங்கல் பகுதிகள் பூசப்பட்டது.
7. கல் சிப்ஸ் சிமெண்ட் கலவை 1:4:8 கொண்டு பாவுக்கல்லுக்கு இடையே உள்ள இடைவெளி நிரப்பப் பட்டது.
8. மண்டபத்தின் மேல்புறமுள்ள பகுதிகள் செங்கல் சுண்ணாம்பு கலவை 1:2 என்ற விகிதத்தில் நிரவப்பட்டு தள ஓடுகள் கூட்டுக் கலவை 1:1:3 என்ற விகிதத்தில் பதிக்கப்பட்டது.
9. விமானம் மற்றும் அதன் பகுதிகள் கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் பூசப்பட்டது.
10. இக்கோயிலின் சிற்பங்கள் அனைத்தும் இரசாயனம் மூலம் தூசி மற்றும் மாசு நீக்கி சுத்தம் செய்யப்பட்டது.
11. வேலை நடைபெறும் முன்னரும், நடைபெறும் பொழுதும், நடைபெற்று முடிந்த பின்னரும் தகுந்த நிழற்படங்கள் எடுக்கப்பட்டது.

# 25. வாலீஸ்வரர் கோயில், தக்கோலம்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 9.00 இலட்சம்



வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம் தக்கோலம் என்னும் ஊரில் வாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் அதிஸ்டானத்திலிருந்து கொடுங்கை வரை கருங்கல்லாலும், மேலே செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. விமானம் வட்ட வடிவமானதாகும். அர்த்த மண்டபத்திற்கு வெளியில் கருங்கல் தூண்கள் கொண்ட திறந்தவெளி மண்டபம் உள்ளது. முதலாம் இராசேந்திரனுடைய 8-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு வாலீஸ்வரர் கோயிலின் தொன்மையான கல்வெட்டு என்பதால் கி.பி.1020-க்கு முன் கட்டப்பட்டது உறுதியாகிறது.

இக்கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.78/ தமிழ்வளர்ச்சி – பண்பாட்டுத்துறை/நாள் 23.3.1987-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-வது நிதிக்குழு மானியத்தில் மேற்காணும் கோயிலின் பாதுகாப்பு பணிகளை பொதுப்பணித்துறை மூலம் மேற் கொள்ள அரசாணை (நிலை) எண்.175/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 5.10.2009-இல் ரூ.9.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. கோயிலின் வரிக்கற்கள் பிரித்து எடுப்பதற்கு முன்பாக உள் பகுதிகளில் முட்டுக் கொடுக்கும் பணி.
2. கோயிலின் உபானம் வரி முதல் அதிட்டானம் வரி வரை மண்ணால் மூடப்பட்டிருந்ததை அகற்றி வெளிக் கொணரும் பணி.
3. செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்யும் பணி.
4. கோயிலின் மேல் பகுதியுள்ள வெதரிங் கோர்ஸ் அகற்றும் பணி.
5. கோயிலின் வியாழம் மற்றும் கபோதகம் வரி கற்கள் எண் இடப்பட்டு, பிரித்து எடுக்கும் பணி.
6. கோயிலின் வெளிப்புற வரிக்கற்கள் தன் நிலையிலிருந்து அகன்று இருந்ததை பிரித்து எடுக்கும் பணி.
7. கோயிலின் வரிக்கற்களின் இடைப்பட்ட பகுதியில் உள்ள செங்கல் ஜல்லிகளை அகற்றும் பணி.
8. கோயிலின் கடக்கால் பகுதிகளை கருங்கல் மற்றும் கூட்டுக்கலவை கொண்டு திடப்படுத்தும் பணி.
9. கோயிலின் வரிக்கற்கள் கூட்டுக்கலவை கொண்டு கட்டும் பணி.
10. கோயிலின் வரிக்கற்களின் இடைப்பட்ட பகுதியில் செங்கல் ஜல்லி, கூட்டுக்கலவை கொண்டு நிரப்பும் பணி.
11. கபோதகம் மற்றும் வியாழம் வரிக்கற்கள் இல்லாத இடத்தில் புதிதாக கற்கள் வாங்கி அதை சீர் செய்து பொருத்தும் பணி.

12. கோயிலின் பாவுக்கல்லுக்கு இடைப்பட்ட பகுதியில் ஜல்லி மற்றும் சிமென்ட் கலவை கொண்டு அடைக்கும் பணி.
13. செங்கல், ஜல்லி, சுண்ணாம்பு கலவை கொண்டு வெதரிங் கோர்ஸ் போடும் பணி.
14. வெதரிங் கோர்ஸ் மேல் பகுதியில் தள ஓடுகள் அமைக்கும் பணி.
15. கோயிலின் பிரதான கதவுகள் தேக்கு மரத்தில் செய்து பொருத்தும் பணி.
16. விமானம் பகுதியில் பழைய சுண்ணாம்பு காரைகளை அகற்றும் பணி.
17. விமானம் பகுதியில் விரிசல் இருந்து பகுதிகளில் கூட்டுக் கலவை கொண்டு அடைக்கும் பணி.
18. விமானம் பகுதிகளில் கூட்டுக்கலவை கொண்டு பூசும் பணி.
19. விமானத்தில் உடைந்து காணப்பட்ட சுதை சிற்பங்கள் அகற்றி எடுத்துவிட்டு புதிதாக பொருத்தும் பணி.
20. கோயிலின் எல்லை வரம்பில் மதிற்சுவர் கட்டுவதற்காக கடக்கால் தோண்டும் பணி, கடக்காலில் மணல் நிரப்பும் பணி, அதன் மேல் சிமென்ட் கான்கிரீட் 1:4:8 போடும் பணி.
21. கருங்கல், சிமென்ட் கலவை கொண்டு சுவர் கட்டும் பணி.
22. கருங்கல்லின் மேல் இரும்பு ஆங்கில் கம்பங்கள் பொருத்தி கம்பிவேலி அமைக்கும் பணி.
23. இரும்பு கதவு பொருத்தும் பணி.
24. இரும்பு ஆங்கில் கம்பங்கள் மற்றும் இரும்பு கதவுகளுக்கு வர்ணம் அடிக்கும் பணி.

25. வெளிப்பக்கம் சில பகுதிகள் மற்றும் மண்டபம் பகுதி களில் கருங்கல் தளம் அமைக்கும் பணி.

26. பாலீஸ் செய்யப்பட்ட கருங்கல்லில் அறிவிப்பு பலகை அமைக்கும் பணி.

27. பணிகள் நடக்கும் போது ஆவணப்படுத்தும் வகையில் நிழற்படங்கள் எடுக்கும் பணி.

# 26. சிவன் கோயில், கோபுரப்பட்டி

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 4.80 இலட்சம்



திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அழகிய மணவாளத்தில் இச்சிவன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் உத்தம சோழன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கல்வெட்டுகளில் உத்தமசோழன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய மன்னர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இக்கோயிலின் கருவறையில் பட்டைகளுடன் கூடிய லிங்கமும், தாமரைப் பூ வடிவில் ஆவுடையாரும் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறையை அடுத்து அர்த்த மண்டபம், அதனை அடுத்து மகாமண்டபம் உள்ளது. இக்கோயிலின் விமானம் திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் அமைந்துள்ளது.

மேற்காணும் சிவன் கோயில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்.269/தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத் துறை/நாள் 20.12.1994-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இசிவன் கோயில் பாதுகாப்பு பணிகளை 12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.159/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்(அ.தொ.2)துறை/நாள் 8.10.2007-இல் ரூ.4.80 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

1. மகா மண்டபத்திலுள்ள சீலிங் கற்கள் தகுந்த இரும்புத் தகடுகள் கொண்டு சீலிங் சென்டரிங் போல் அமைக்கப் பட்டது.
2. சேதமடைந்த செங்கல் சுண்ணாம்பு கலவை முற்றிலுமாக நீக்கப்பட்டது.
3. கபோதகம் மற்றும் வியாழ வரிக்கற்கள் எண் இடப்பட்டு கீழிறக்கப்பட்டது.
4. மகா மண்டபத்தில் கிழக்குப் பக்கம் உள்ள உத்திரம் மற்றும் தூண்கள் கவனமாகக் கீழே இறக்கி வைக்கப் பட்டது.
5. கருவறை கோபுரத்தில் உள்ள சென்னைக் கூரை முற்றிலுமாக பிரிக்கப்பட்டது.
6. மகா மண்டபத்தில் உள்ள பழைய உடைந்த உத்திரம் நீக்கிவிட்டு, புதிய உத்திரக்கல் பொருத்தப்பட்டது.
7. கருவறை மற்றும் மகா மண்டபத்தின் மேல் செங்கல் சுண்ணாம்பு கலவை 1:2 என்ற விகிதத்தில் புதியதாக இடப்பட்டு. கூட்டுக் கலவை 1:1:3 என்ற விகித்தில் தள ஓடுகள் பதிக்கப்பட்டது.
8. கருவறை மேல்தளம் மரப் பலகையினால் சீலிங் அமைக்கப்பட்டுள்ளது. கோவில் கதவு ஒன்று பூட்டும் அமைப்புடன் அமைக்கப்பட்டது.
9. விமானம் முழுவதும் கூட்டுக் கலவை 1:1:5 என்ற விகிதத்தில் பூசப்பட்டது.
10. கோவிலைச் சுற்றிலும் பாதைக்கு கல்தரை பதிக்கப் பட்டது.

11. தற்போதுள்ள முள் வேலிக் கம்பி மீது செயின் லிங்க் கம்பி வேலி புதியதாகப் போடப்பட்டுள்ளது.
12. கருப்பு கிரானைட் தகவல் பலகை ஒன்று 0.90 மீட்டர் X 1.20 மீட்டர் அளவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறுவப்பட்டுள்ளது.
13. வேலை நடைபெறும் முன்னரும், நடைபெறும் பொழுதும், நடைபெற்று முடிந்த பின்னரும் தகுந்த நிழற்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

# 27.மாளிகைமேடு, உடையார்பாளையம்

மதிப்பீட்டுத் தொகை – ரூ. 3.00 இலட்சம்

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் மாளிகைமேடு அமைந்துள்ளது. முதலாம் இராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராக ஆட்சி செய்த பொழுது ஒரு பெரிய அரண்மனையை உருவாக்கியுள்ளான். இந்த அரண்மனை காலப்போக்கில் அழிந்து இன்று மண்மேடாகி, மாளிகை மேடு என்று அழைக்கப்படுகிறது.

இம்மாளிகைமேடு பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசாணை எண்: 145/கல்வித் துறை/ நாள்: 27.1.1979-இல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12-ஆவது நிதிக்குழு மானியத்தில் பொதுப்பணித் துறை மூலம் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் உள்ள மாளிகைமேடு பகுதியில் சிற்பங்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் அரசாணை எண்:175 சுற்றுலா(ம)பண்பாடு(அதொ2)துறை, நாள்:5.10.2009-இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது**

1. சிலைகள் வைக்கப்பட்டுள்ள இடத்தைச் சுற்றி கடக்கால் தோண்டும் பணி.
2. சிமென்ட் கான்கிரீட் 1:5:10 கொண்டு கடக்கால் திடப் படுத்தும் பணி.

3. செங்கற்கள், சிமெண்ட் கலவை கொண்டு சுவர் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.

3. செங்கற்கள், சிமெண்ட் கலவை கொண்டு சுவர் கட்டுமானம் மேற்கொள்ளும் பணி.

4. சிமெண்ட் கான்கிரீட் 1:2:4 கொண்டு இரும்பு குழாய்கள் பொருத்தும் பணி.

5. சிமெண்ட் தகடு கொண்டு கூரை அமைக்கும் பணி.

6. சிமெண்ட் கலவை 1:5 கொண்டு செங்கல் கட்டுமானம் பூசும் பணி.

7. 12 மி.மீ. கருங்கல் ஜல்லி மற்றும் சிமெண்ட் கலவை கொண்டு தரை அமைக்கும் பணி.

8. சிலைகள் வைக்கப்பட்டுள்ள பீடம் மற்றும் செங்கல் கட்டுமான பகுதிகளுக்கு கலர் வெள்ளை அடிக்கும் பணி.

9. இரும்பு ஆங்கில் கம்பங்களுக்கு வர்ணம் அடிக்கும் பணி.